# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● பிப்ரவரி 5, 2022 Weekly E-paper ● February 5, 2022




## ஆளுநரால், ஆளுநருக்காக, ஆளுநரே ஆளும் நாடா இது?

சுப. வீரபாண்டியன்

**பொருளாதார ஏற்றத்தாழ்வை அதிகரிக்கும் நிதிநிலை அறிக்கை!**

பேராசிரியர் முனைவர் வெ.சிவப்பிரகாசம்

**மக்கள் தளபதி ஸ்டாலின்**

தலையங்கம்

**லாவண்யாவின் இறப்பும் பா.ஜ.க.வின் நீலிக் கண்ணீரும்**

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● பிப்ரவரி 5, 2022 Weekly E-paper ● February 5, 2022


# ஆளுநரால், ஆளுநருக்காக, ஆளுநரே ஆளும் நாடா இது?

சுப. வீரபாண்டியன்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை, நான்கு மாதங்களுக்கு மேல் தன்னிடம் வைத்துக் கொண்டிருந்துவிட்டு, ஆளுநரே பிறகு அதனைத் திருப்பி அனுப்பி விடுவதென்பது என்ன வகை ஜனநாயகம் என்பது நமக்குப் புரியவில்லை.

நீட் தேர்வில் தமிழ்நாட்டுக்கு விலக்கு வேண்டும் என்று கடந்த ஆறு ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்தும், அதனை ஏற்காமல் தமிழ்நாடு சட்டமன்றத்தையும், தமிழ்நாடு மக்களையும் அவமதிக்கும் ஒன்றிய அரசின் போக்கு, கடும் கண்டனத்திற்குரியதாக இருக்கிறது. இது ஒருபுறம் இருக்க, இப்போது நாம் விவாதிக்க வேண்டிய இரண்டு முதன்மையான வினாக்களைப் பற்றி பேசவேண்டியுள்ளது.

ஒன்று, தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி, நீட் போன்ற நுழைவுத் தேர்வுகள் எந்த ஒரு மாநிலத்திற்கும் தேவையா என்பது. இன்னொன்று, அப்படியே தேவை என்றாலும், அதனைத் தீர்மானிக்க வேண்டிய உரிமை யாரிடம் இருக்க வேண்டும் என்பது!

நீட் தேர்வு வேண்டாம் என்றால், உடனே, இவர்கள் எப்போதும் போட்டிக்குத் தயாராக இருப்பது இல்லை, தகுதியும், திறமையும் இல்லாமலேயே எல்லாப் பொறுப்புகளுக்கும் வந்துவிட வேண்டும் என்று கருதுகின்றனர்





என்று அவதூறு பேசுகின்றனர். நீட் தேர்வு மட்டும்தான் தகுதி, திறமையை முடிவு செய்யும் என்றால், நம் பிள்ளைகள் 12ஆம் வகுப்பில் எழுதும் தேர்வுகள் எதையும் முடிவு செய்யாதா? அப்படியானால் அந்த 12 ஆண்டுகாலப் படிப்பும், இறுதியில் நடத்தப்படும் தேர்வுகளும் எதற்காக? எல்லாப் பள்ளிக்கூடங்களையும் மூடி விடலாமா? நேரடியாக நீட் தேர்வு மட்டும் எழுதித் தேர்வாகி விட்டால் போதும் என்று ஒன்றிய அரசு கருதுகிறதா?

படிப்பு என்பது படிப்படியான வளர்ச்சி நிலை. அப்படி வளர்ந்து, 12ஆம் வகுப்பில் எழுதும் தேர்வின் முடிவுகளே மாணவர்களின் கல்வி நிலையைக் காட்டும். எனவே நீட் மட்டுமன்று, எல்லாவிதமான நுழைவுத் தேர்வும், எந்த மாநிலத்திலும் தேவையில்லை என்பதே சரியானது!

அப்படியே ஒரு நுழைவுத் தேர்வு கண்டிப்பான தேவை என்று கருதினால், அதனை அந்தந்த மாநிலங்களே நடத்திக் கொள்ளட்டும். இதற்கு எதற்காக ஒரு ஒன்றிய அரசு? மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்களைத் தீர்ப்பது, மாசு கட்டுப்பாட்டினை நாடு முழுவதும் ஒழுங்கு செய்வது, வெளிநாடுகளுடனான கொள்கை முடிவுகளை வகுப்பது போன்றவைகளை மட்டும் ஒன்றிய அரசு தன்னிடம் வைத்துக் கொள்வதுதான் சரியானது. பள்ளிக்கூடம் நடத்துவது, தேர்வு வைப்பது எல்லாம் மாநிலங்களின் உரிமைகளும், கடமைகளும் ஆகும்!


இவை எல்லாவற்றிற்குமான ஒரே தீர்வு - கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவருவதாக மட்டுமே இருக்கும். ●



# பொருளாதார ஏற்றத்தாழ்வை அதிகரிக்கும்
# நிதிநிலை அறிக்கை!

**பேராசிரியர் முனைவர் வெ.சிவப்பிரகாசம்**

ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையை நிர்மலா சீதாராமன் அவர்கள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார்கள். இது முன்னேற்றத்திற்கான *(Development)* ஒரு நிதி நிலை அறிக்கையா என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டி இருக்கிறது.


வெ.சிவப்பிரகாசம்

முன்னேற்றம் *(development)*, வளர்ச்சி*(growth)* இரண்டிற்கும் வேறுபாடு இருக்கிறது. முன்னேறிய நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் *(economic growth)* மட்டும் கவனம் செலுத்துவார்கள். அவர்கள் பெரும்பாலும் சமூக, பண்பாடு போன்ற நிலைகளில் கவனம் செலுத்துவதில்லை. சேமிப்பு மற்றும் முதலீடு என்பதை மட்டுமே அவர்கள் கணக்கில் கொள்வார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. வரவை விட செலவு அதிகமாக இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் உற்பத்தியை அதிகரிப்பதற்குக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

நம்முடைய பொருளாதாரம் என்பது ஏழைப் பொருளாதாரம். ஆகவே இங்கே முன்னேற்றம் என்பதுதான் முக்கியம். இந்தியாவில் வறுமை, வேலையின்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், குறைந்த பொருளாதார வளர்ச்சி ஆகியனதான் இருக்கின்றன. இதனை சரிசெய்ய கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

பொருளாதார அறிஞர்கள் அபிஜித் பானர்ஜி மற்றும் டப்ளோ எழுதிய ஒரு கட்டுரையில் 1990க்குப் பிறகு 1 விழுக்காடு மக்கள், 38 விழுக்காடு வருமானத்தை எடுத்திருந்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஒரு விழுக்காட்டினருக்குத்தான் வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. அடிமட்டத்தில் இருக்கும் 50 விழுக்காடு ஏழை மக்களுக்கு 2.5 விழுக்காடுதான் வருமானம் போயிருக்கிறது. உலகத்திலேயே ஏழை-பணக்காரர்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வு அதிகமாக இருப்பது இந்தியாவில்தான். அதாவது *'Country of Inequalities'*.



இந்த இடைவெளியைக் குறைக்கவில்லை என்று சொன்னால் பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது.

கவுசிக் பாசு எனும் பொருளாதார அறிஞர் அண்மையில் எழுதிய ஒரு கட்டுரையில், கொரோனா தொற்றுக் காலத்தில் மேல்தட்டு மக்களின் வருமானம் அதிகமாகி இருப்பதாகவும், அடிமட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் வருமானத்தை இழந்து இருப்பதாகவும் தெரிவித்து இருக்கிறார். அதாவது மேல்தட்டில் இருக்கக்கூடியவர்களின் வருமானம் 23 லட்சம் கோடியில் இருந்து 53 லட்சம் கோடியாகப் பெருகியிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு மானியங்களையும் குறைத்திருக்கிறார்கள். உணவுக்குக் கொடுக்கக்கூடிய மானியத்தையும், மக்களை வறுமையின் பிடியில் இருந்து காக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கும் மானியத்தைக் குறைத்திருக்கிறார்கள். இதனால் கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்குப் பணம் போய்ச் சேரப் போவதில்லை. எனவே இந்த நிதி நிலை அறிக்கை என்பது ஏழை எளிய மக்களை நோக்கி உருவாக்கப்படவில்லை.

பதிவுத் துறையை ஒன்றிய அரசு எடுத்துக் கொள்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். இது மிகவும் ஆபத்தானது. அதேபோல் டிஜிட்டல் கரன்சி என்பதும் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கக்கூடிய ஒன்றாக அமையும். ஜிஎஸ்டி எனப்படும் இந்த மறைமுக வரி ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சுவதாகும். அவர்கள் கையில் பணம் இல்லாமல் செய்துவிடும்.

ஒரு ரூபாய், ஒரு சாதாரணக் குடிமகனுக்குப் போக வேண்டும் என்று அரசாங்கம் செலவு செய்தால் 14 பைசா மட்டும்தான் செல்கிறது, மீதமுள்ள 86 பைசா அந்த மக்களுக்குப் போய்ச் சேர்வதில்லை. இந்தச் சீர்கேட்டைக் களைய எந்த நடவடிக்கையும் இந்த நிதிநிலை அறிக்கையில் எடுக்கப்படவில்லை.

எனவே இந்த நிதிநிலை அறிக்கை என்பது வளர்ச்சிக்கான நிதிநிலை அறிக்கை அல்ல. வறுமை, ஏழ்மை அதிகரிக்கும். பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள இடைவெளியை அதிகரிக்கும். வரி அதிகமாகப் போடப்படவில்லை என்றாலும்கூட இருக்கிற வருவாய் குறையும். பொருளாதார மந்தம் ஏற்படும். விலைவாசி கூடும். எனவே இந்த நிதிநிலை அறிக்கை மக்களுடைய வறுமை ஏழ்மைக்குத் தீர்வு காணவில்லை. ●

உள்ளாட்சித் தேர்தலில் உங்கள் வாக்கு
உதயசூரியன் மற்றும் கூட்டணிக் கட்சிகளுக்கே!

## செயல் வீரர்கள் கூட்டம் - சேலம்



29-01-2022 அன்று காலை சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மாவட்டங்கள் ஒன்றிணைந்த திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் செயல்வீரர்கள் கூட்டம் சேலத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேரவையின் துணைப் பொதுச்செயலாளர்கள் தோழர் சிற்பி செல்வராஜ், தோழர் சிங்கராயர், முதன்மைச் செயலாளர் தோழர் புலேந்திரன், அமைப்புச் செயலாளர் தோழர் கா.சு. நாகராசன் ஆகிய தலைமைப் பொறுப்பாளர்களுடன் சேலம் மாவட்டச் செயலாளர் தோழர் சுந்தர வதனம், தர்மபுரி மாவட்டச் செயலாளர் தோழர் ராவணன், கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் தோழர் தினேஸ், நாமக்கல் மாவட்டச் செயலாளர் தோழர் அகிலன் ஆகிய நான்கு மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட தோழர்கள் பேரவையின் அடுத்தக் கட்டச் செயல்பாடுகள், செயல் திட்டங்கள் குறித்து விரிவாகப் பேசியுள்ளார்கள்.

## செயல் வீரர்கள் கூட்டம் - திருப்பூர்



கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களின் செயல்வீரர்கள் கூட்டம் 29-01-2022 அன்று பல்லடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநிலத் தலைமைப் பொறுப்பாளர்களுடன் மாவட்டச் செயலாளர் தோழர் பிரகாஷ், நிதிக்குழு ஆலோசகர் தோழர் முகில்நிலா மணி கண்டன், நகரச் செயலாளர் தோழர் முருகானந்தம் உள்ளிட்ட தோழர்கள் பேரவையின் வளர்ச்சி, செயல் திட்டங்கள் குறித்துக் கலந்து உரையாடினார்கள்.

### "கோட்சேவின் துப்பாக்கி பத்திரமாயிருக்கிறது" நூல் அறிமுகம்



31-01-2022 அன்று சிதம்பரத்தில் மாணவர் இந்தியா சார்பில் காந்தி படுகொலை பயங்கரவாத எதிர்ப்பு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. அக்கருத்தரங்கில் எழுத்தாளர் உமா எழுதிய "கோட்சேவின் துப்பாக்கி பத்திரமாயிருக்கிறது" என்ற கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியிட்ட நூலை, மனிதநேய ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளர் மு.தமிமுன் அன்சாரி அறிமுகப்படுத்த, அந்நூல் படிகளை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் சிந்தனைச் செல்வன், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் க.கனகராஜ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## மக்கள் தளபதி ஸ்டாலின்

மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் அடி என்பார்கள்.

தெற்கே தமிழ்நாட்டின் கோட்டையில் இருந்து கழகத் தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் அவர்களும், வடக்கே நாடாளுமன்றத்தில் இருந்து ராகுல் காந்தி அவர்களும் பலமான அடிகளைக் கொடுத்திருக்கிறார்கள் பா.ஜ.கவுக்கு.

நீட் விலக்குக் கோரிய தமிழக அரசின் வேண்டுகோளை ஆளுநர், குடியரசுத் தலைவருக்கு அனுப்பாததைச் சுட்டிக்காட்டிப் பேசினார் ராகுல்.

அப்போது அவர் தமிழக மக்கள் பக்குவப் பட்டவர்கள், சிந்திக்கத் தெரிந்தவர்கள், தமிழ்நாட்டில் உங்கள் பாச்சாவெல்லாம் பலிக்காது, தமிழ்நாட்டின் ஆட்சியை உங்கள் வாழ்நாளில் ஒருபோதும் பிடிக்க முடியாது என்று அனல் பறக்கப் பேசினார்.

கூடுதலாக இந்தியா என்பது மன்னராட்சியின் கீழ் ஒரு நாடாக இல்லை. அது பல மாநிலங்களால் ஒன்றிணைந்த கூட்டமைப்பு என்று செவிப்பறையில் அடித்தாற்போலப் பேசினார்.

அப்போது அவையில் செய்வதறியாது தவித்தனர் பா.ஜ.கவினர் என்பதைப் பார்க்க முடிந்தது, தொலைக் காட்சியில்.

இது ஒருபுறம் இருக்க, தமிழ் நாட்டின் வல்லமை மிக்க முதல்வர் ஸ்டாலின் அவர்கள், வடக்கே சோனியா காந்தி தொடங்கி தெற்கே ஓ.பன்னீர்செல்வம் வரை ஒன்றியத்தின் 37 அரசியல் ஆளுமைத் தலைவர்களுக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஒன்றியம் முழுவதும் சமூக நீதிக்காக ஒன்றுபட வேண்டும், ஓரணியில் ஒன்றுபட்டுத் திரள்வோம் வாருங்கள் என்று அழைப்பு விடுத்துள்ளார் அவர்.

பா.ஜ.கவின் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டார்கள் ஸ்டாலினும், ராகுல் காந்தியும்.

இது ஒரு நல்ல அறிகுறியாகத்தான் இருக்கிறது. நம் முதல்வரின் முயற்சி நிறைவேறும் என்ற நம்பிக்கைக்கு ஒன்றியத்தின் அரசியல் சூழல் சாதகமாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் இருந்து தந்தை பெரியார் அவர்களின் "சமூக நீதி"க் கொடியை, ஒன்றியம் முழுவதும் பறக்கவிட முயலும் ஸ்டாலின்தான் உண்மையான "மக்கள் தளபதி".

ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024, தொலைபேசி: 044-2472 6408**

## பொறுப்பாளர்கள் நியமனம்

இனமானப் பேராசிரியர் படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர்களாக கீழ்க்காணும் தோழர்கள் நியமிக்கப்படுகிறார்கள்

1. மதிவாணன் (சென்னை)
2. குமரன்தாஸ் (காரைக்குடி)
3. சரவணப்பெருமாள் (ஈரோடு)

கீழ்க்காணும் தோழர்கள் இளைஞரணிப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்:

மாநில இளைஞரணிச் செயலாளர்

4. இரா.சந்தானம்,

இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள்

5. தோழர் வே.ஜெகந்நாதன், வேலூர்
6. தோழர் ஸ்டுடியோ சரவணன், மதுரை
7. தோழர் வளசை கணேசன், சென்னை

மாவட்டத் தலைவர், சென்னை மாவட்டம்

8. தோழர் சரவணன்

மாவட்டச் செயலாளர், சென்னை மாவட்டம்

9. தோழர் ரமேஷ் துரை

காஞ்சி மாவட்ட அமைப்பாளர்

10. தோழர் அன்புச்செல்வன்,

திருச்சி மாவட்ட அமைப்பாளர்

11. தோழர் பிரவீன்,

மதுரை மாவட்ட அமைப்பாளர்

12. தோழர் கார்த்திகேயன்,

சேலம் மாவட்ட இளைஞரணித் தலைவர்

13. தோழர் பிரவீன்

சேலம் மாவட்டச் செயலாளர்

14. தோழர் சுரேஷ்

சேலம் மாவட்டச் துணைச் செயலாளர்

15. தோழர் முனீஷா

சேலம் மாநகர இளைஞரணி அமைப்பாளர்

16. தோழர் அரவிந்த்,

திருப்பூர் மாவட்ட இளைஞரணிச் செயலாளர்

17. தோழர் கதிர்வேல்,

திருப்பூர் மாநகர இளைஞரணிச் செயலாளர்

18. தோழர் கர்ணராஜ்,

திருப்பூர் ஒன்றிய இளைஞரணிச் செயலாளர்

19. தோழர் அருண்,

ஈரோடு மாவட்ட இளைஞரணித் தலைவர்

20. தோழர் ஆதி,

ஈரோடு மாவட்ட இளைஞரணிச் செயலாளர்

21. தோழர் பாலமுருகன்,

சுப.வீரபாண்டியன்
பொதுச் செயலாளர்

# லாவண்யாவின் இறப்பும் பா.ஜ.க.வின் நீலிக் கண்ணீரும்

சாரதாதேவி

**2022,** ஜனவரி மாதம், ஒன்பதாம் நாள். தஞ்சை, திருக்காட்டுப் பள்ளி, தூய இருதய மேல்நிலைப் பள்ளியின் விடுதியில் தங்கிப் படித்த 12ஆம் வகுப்பு மாணவி லாவண்யா, பூச்சி மருந்து குடித்துள்ளார். 4 நாட்கள் வீட்டில் மருத்துவம் பார்த்தும் கேட்காததால் 15ஆம் நாள் அவரை தஞ்சை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார் தந்தை. அங்கு மருத்துவ ஆய்வில் அவர் பூச்சி மருந்து குடித்தது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

தற்கொலை முயற்சியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர், 16ஆம் நாள் காவல் துறை அவரிடம் வாக்குமூலம் வாங்கி உள்ளது. அதில் எதிலும் லாவண்யா மதமாற்ற நிர்ப்பந்தம் இருந்ததாகக் கூடக் கூறவில்லை. தன்னிடம் அதிகமான வேலை வாங்கியதாக அவர் விடுதிக் காப்பாளர் பெயரைச் சொல்லி இருக்கிறார். 18ஆம் நாள் விடுதிக் காப்பாளர் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார். தமிழக அரசு எல்லாக் கோணங்களையும் ஆய்வு செய்து, குற்றவாளிகளைத் தண்டிக்க உறுதி பூண்டுள்ளது.

இதன் நடுவே, வடுகபாளையத்தைச் சேர்ந்த விசுவ இந்து பரிஷத்தின் பொறுப்பாளர்கள் முத்துவேல், சேகர், அசோக் ஆகியோர் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டுத் தங்கள் அரசியலுக்கு ஒரு தூண்டில் மீன் கிடைத்ததாகக் களம் இறங்கி உள்ளனர். அவர்கள் அந்த மாணவியிடம் மதமாற்றக் கோணத்தைப் போட்டு வாங்கி உள்ளதாகவே சந்தேகிக்க வேண்டி உள்ளது. 2 ஆண்டுகளுக்கு முன் ஒரு கன்னியாத்திரீ அவருடைய பெற்றோரை மதம் மாறக் கேட்டதாக அவர் அந்தக் காணொளியில் கூறுகிறார். உடனடியாக அந்தக் காணொளியை எடுக்கும் நபரே, "அதனால்தான் உன்னைத் தொந்தரவு செய்தார்களா?" என்று முடிக்கிறார்.

இந்தக் காணொளியை பா.ஜ.க. வினர் ஒரு மத வெறுப்பு அரசியலுக்கான ஆயுதமாக எடுத்திருப்பதையே தொடர்ந்து நடக்கும் செய்திகள் நமக்கு எச்சரிக்கை விடுக்கின்றன. "இருக்கலாம்" என்று அக்கேள்விக்குப் பதில் சொன்ன மாணவி இன்று உயிரோடில்லை. பா.ஜ.க. இந்தச் சத்தற்ற மிகப் பலவீனமான, கேட்டு வாங்கப்பட்ட அந்த ஒரு வாக்கியத்தை வைத்தே ஒரு பெரும் அரசியல் அதிரடிக்கு, கலவரத்திற்குத் தயாராகி உள்ளது. 19ஆம் நாள் மாபெரும் ஆர்ப்பாட்டத்திற்குத் தயார் செய்த நிலையில், அன்றுதான் மாணவி இறக்கிறார்.

சென்னை தொழில்நுட்பக் கல்லூரியில், பார்ப்பனப் பேராசிரியர்களால் கேலிக்கு உள்ளாக்கப்பட்டு மன உளைச்சலால் பாத்திமா என்ற மாணவி கடிதம் எழுதிவைத்து விட்டு இறந்தபோதோ, ஹைதராபாத்தில் பல்கலையில் ரோஹித் வெமூலா என்ற ஒடுக்கப்பட்ட மாணவன் தன் முனைவர் ஆய்வுப் படிப்பை எல்லாம் துறந்து தற்கொலை செய்தபோதோ, இன்னும் இந்த மண்ணில் ஒடுக்கப்பட்ட, சிறுபான்மையினரோ, அல்லது இடை நிலை அல்லது உயர் சாதியினரோ கூட பார்ப்பன அதிகார மையங்களால் துன்புறுத்தப் படும்போது அதைப் பொருட்படுத்தக் கூடச் செய்யாத காவிக் கூடாரங்கள்தான் சிறுபான்மை நிறுவனங்கள் எங்காவது சிக்கினால் அதை வைத்து இங்கே சடலங்கள் விழ வைக்கவும், அதன் வழி தங்கள் அரசியல் இருப்பை வலுப்படுத்தவும் முயல்கின்றன.

அண்ணாமலைக் குழுவினரின் இரத்த வரலாறுகளுக்குத் தமிழ்நாட்டைப் பலி கேட்கிறது இந்துத்துவம். அவர்களுடைய சதி வலைக்குள் சிக்கிய மாநிலங்கள் யாவும் வளர்ச்சிப் பாதையிலிருந்து விலகி ஒருவரை ஒருவர் வெறுத்து, மோதல் பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. இந்த வழக்கின் போக்கு இந்துத்துவ கலவர அரசியலுக்கு வழி கோலுவதை எண்ணி மிகுந்த உற்சாகத்தில் இருக்கின்றன காவிக் கூடாரங்கள். இந்தியா முழுவதிலும் இதைப் பெரிது படுத்தும் முயற்சிகளில் இறங்கி உள்ளது பா.ஜ.க. வடக்கின் ஊடகங்கள் இந்த வழக்கை பூதாகரமாகப் பேச வைக்கப் பட்டுள்ளன. தமிழ்நாடு தனித்த நாடு. இங்குக் காவிக் கூடாரங்கள் வாலாட்ட இயலாது என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், கோவை மட்டுமல்லாது, தற்போது திருச்சியும், தஞ்சையும் கூட வெறுப்பரசியலில் சிக்கி இருப்பதை நாம் மிகுந்த கவலையோடும் பொறுப்போடும் அணுக வேண்டிய தேவை இருக்கிறது. மக்கள் இயக்கங்கள் மிகவும் கூடுதலாக மட்டுமல்ல மிக அவசரமாகவும் தேவைப் படுகின்றன. லாவண்யா வழக்கில் உண்மைகளை உரத்துச் சொல்ல சுதந்திரமான கள ஆய்வுகள் தேவைப் படுகின்றன. ●